- நேரம் இருப்பின், மாணவர்கள் தங்கள் கலந்துரையாடலின் நோக்குப் பற்றி உடனடியாக எண்ணத் தொடங்கவேண்டும், அதனுடன் ஒரு மனவரைப்பட வடிவிலே எடுத்துரைப்பினை சுருக்கக் குறிப்பில் அமைக்கலாம். அடுத்த கிழமைக்கான வீட்டுவேலை: 5-10 மணித்துளி வரையான ஒரு சிறிய எடுத்துரைப்பினை ஏற்பாடு செய்து பயிற்சி செய்யவும்.
- அடுத்த கிழமையில், எடுத்துரைப்புகள் வழங்கப்பட்டு பொருளின் தரம், மொழி, எடுத்துரைப்புகளுக்கான நிறுவப்பட்ட முன்னூட்டல்களைப் பின்பற்றல் என்பன பற்றிக் கலந்துரையாடப்படும்.

---

# 32 மதிப்பீட்டுக்கு: மின்வெட்டொளி

**இலக்கு**

*மாணவர்கள் மதிபீட்டுக் கற்கைக்கான எளிமையான நடைமுறை பற்றி தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்கின்றனர், அது எத்தகைய சூழ்நிலைக்கும் பொருத்தமானது (ஒரு கலந்துரையாடலுக்கோ, ஓதலுக்கோ, எடுத்துரைப்புக்கோ பின்னர் நடைபெறுவது). நடைமுறையைப் பயன்படுத்த மாணவர்கள் மிகுந்த கண்காணிப்புடன் கேட்டு, கற்றுத் தம் எண்ணக் கருத்துகளை ஆகக்கூடியது இரண்டு வாக்கியங்களில் சுருக்கமாகவும் துல்லியமாகவும் தொகுக்கவேண்டும்.*

தரம் 1 - 9

5 - 10 மணித்துளிகள்



உசாத்துணை:
Ernst & Ruthemann (2003), பக்கம் 51
(நூற்பட்டியல் உசாத்துணை)

**குறிப்புகள்:**

- ஒரு கற்றல் பொருளை அல்லது பாடத் தொடரை நிறைவு செய்ய மின்வெட்டொளியின் பயன்பாடு மிகப் பொருத்தமானதாகும். அதனுடைய சுருக்கம் காரணமாக எல்லா மாணவர்களுக்கும் தங்கள் கற்றல் பற்றிப் பேசவும் இது பற்றி எண்ணவும் வாய்ப்பு உண்டு என்னும் நன்மையை அது உடையது. எப்படியிருப்பினும், மின்வெட்டொளி, மிக விரிவான வழிகாட்டு விதிகள் சார்ந்த வடிவங்களையுடைய கலந்துரையாடல் மற்றும் கற்றல் மதிப்பீடு என்பவற்றுக்குப் பதிலாக அமையமுடியாது.

---

**நடைமுறை:**

- ஒரு பாடம், எடுத்துரைப்பு, கலந்துரையாடல், முதலியனவற்றுக்கு இணங்க, ஒவ்வொரு மாணவரும் ஆகக் கூடியது இரண்டு வாக்கியங்களில் தான் குறிப்பாக எதை விரும்பினார் என்பதைச் சுருக்கிக் கூறுகிறார், அவர் எதை மிக நல்லது என எண்ணினார் மற்றும் / அல்லது எதில் முன்னேற்றத்துக்கான கைகூடலைக் கண்டார். (எந்த நிகழ்வு மதிப்பிடப்படுகிறது என்பதைப்பொறுத்து, வினாக்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.) பின்னூட்டல்கள் நான் வடிவில் அமைக்கப்படவேண்டும், இதையும் பார்க்கவும் #13 "பின்னூட்டல் வழங்குதல்".
- ஆசிரியர் தானே 1-2 வாக்கியங்களை மதிப்பீடு செய்வதுடன் அல்லது மாணவர் பங்களிப்புகளின் ஒரு சுருக்கத் தொகுப்புடன் மின்வெட்டொளி சுற்றினை முடிக்கின்றார்.

---

**குறிப்புகள்:**

- வாக்கிய அமைப்புத் தொகுதிகள் மாணவர்களுடைய எண்ணங்களை வாக்கியங்களாக மாற்றுதற்குத் துணைசெய்கின்றன. எடுத்துக்காட்டு: ("இதன் சிறப்புப்பண்பு … அது …", "எனக்கு … கடுமைகள் இருந்தன", "எனக்கு … தொல்லை உண்டாயிற்று.").

---

**மாற்றுவழி:**

- வாக்கியப் பரிசுகள்: ஒவ்வொரு மாணவரும் ஒரு வாக்கியப் பாராட்டினை தெரிவுசெய்யப்பட்ட சகமாணவருக்கு செலுத்துகிறார் (எ.கா. அந்த நபரின் பிறந்த நாள் அன்று). இந்நெறிமுறையைப் பழகிக்கொள்ள வேண்டும். உண்மையான பாராட்டுகளைக் கண்டுபிடிப்பதும் வெளிப்படுத்துவதும் அவற்றை ஏற்றுக்கொள்வதும் பல மாணவர்களுக்கு எளிதானதல்ல.